www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

மூன்றாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - பிப்ரவரி 2023

# வகுப்பு 9

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

2) முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

3) கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?

அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வரு நிலையணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

4) காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது - இக்குறளின் ஈற்றுச்சீரின் வாய்பாடு யாது?

அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

5) 'யாமரம்' என்பது எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

**II. எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** 4×2=8

6) பகுத்தறிவு என்றால் என்ன?

7) அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

8) யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

9) குறுந்தொகை பெயர்க்காரணம் எழுதுக.

10) சரிந்து - பகுபத உறுப்பிலக்கம் எழுது.

**III. எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** 4×2=8

11) **கலைச்சொல் எழுதுக:**

அ) Rhyme - ஆ) Personality -

12) **சொற்றொடர் உருவாக்குக:**

பசுமரத்தாணி போல

13) மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார்.

**(நேர்க்கூற்றாக மாற்றுக)**

14) **தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக:**

அ) தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் ..............

ஆ) உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை ..............

15) **நிறுத்தக் குறியிடுக:**

அடடா என்று சிலிர்ப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில் குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்ததாகத் திகழ்கிறது.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



**IV. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** **2×4=8**

16) வஞ்சப்புகழ்ச்சி அணியை விளக்குக.

17) 'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக விளக்குக.

18) சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

**V. அலகிட்டு வாய்பாடு எழுது:** **1×4=4**

19) பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

**VI. மனப்பாடப்பகுதி:** **1×5=5**

20) 'யசோதர காவியம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**VII. நெடுவினாக்கள்:** **2×6=12**

21) அ) வார இதழ் ஒன்றில் படித்த கவிதையை / கதையைப் பாராட்டி இதழாசிரியருக்கு கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

22) அ) மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்ற கதையை சுருக்கி ஒரு பக்க அளவில் எழுதுக.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com